இதழ் 05 ஜூலை

உலகத்தையே அதிரவைக்கும்
தேவனுடைய பரிசுத்த

அக்கினி

வானத்தின் கீழ் எங்குமுள்ள ஜனங்கள்
உன்னாலே திகிலும் பயமும் அடையும்படி
செய்ய இன்று நான் தொடங்குவேன்.

உபாகமம் 2:25

Consolation Ministries of Jesus
publication in July

உங்களுக்காக ஒரு நிமிடம்

பிரியமானவர்களே,

உபத்திரவம் நிறைந்த இவ்வுலகத்திலே வாழ்க்கையில் சமாதானமின்மையாலும் முன்னேற்றமின்மையாலும் எந்தக் காரியத்திலும் வெற்றி காணமுடியாத நிலையிலும், வியாதியிலும் வேதனையிலும் இன்னும் அநேக கவலைகளோடும் கண்ணீரோடும் எனக்குத் துணை யாருமே இல்லையா? என்னைத் தேற்றிட யாருமே இல்லையா? என தனிமையிலே வேதனைப்படும் சகோதரனே, சகோதரியே கலங்காதே. உன் கவலையை நீக்க உன் வேதனையை மாற்ற உன் கண்ணீரைத் துடைக்க உன் உள்ளத்தை அறிந்த என் அப்பா இயேசு இருக்கிறார்.

உலகத்திலே உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன்கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன்.

யோவான் 16:33

நமக்காக நம்முடைய வேதனை, கவலை, கண்ணீர் கஷ்டங்களுக்காக மரித்து சிலுவையிலே வெற்றி சிறந்த என் அருமை இரட்சகர் இயேசு கிறிஸ்து இன்று உன்னுடைய உபத்திரவத்திலிருந்து உன்னை மீட்டுக்கொள்ள உன்னண்டையிலே வந்து நிற்கிறார். கலங்காதே, அவர் உன் கண்ணீரைத் துடைக்கின்றவராய் இருக்கிறார்.

ஜெப வேண்டுதல்

அன்பானவர்களே உங்கள் வேண்டுதல்கள் எதுவாயிருந்தாலும் சரி உங்களுக்காக வேண்டுதல் செய்வதற்காக "அக்கினி" ஜெபக்குழு தயாராக உள்ளது. நீங்கள் வேண்டுதல்களை எங்களுக்கு எழுதுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிப்போம்.

எழுத வேண்டிய முகவரி

'அக்கினி' ஜெபக்குழு
இல.173/A, 1ம் ஒழுங்கை,
மகாறம்பைக்குளம்,
வவுனியா.

"Fire" Prayer Group,
No.173/A, 1st Lane,
Maharambaikkulam,
Vavuniya, Sri Lanka.

அல்லது

E-mail : Fire youth1@gmail.com
T.P. 0776185031

உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகும் எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால் பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அவர்களுக்கு உண்டாகும்.

மத்தேயு 18:19

அக்கினி

ஆசிரியர்

சகோ.த. பிரசாத்

உதவியாளர்கள்

அக்கினி வாலிபர்கள்

This day I will begin to put the dread and fear of you upon the Nations the whole heaven.

Deuternomy 2 : 25

இந்த அக்கினியை வெளியிட திட்டங்களை தந்து அதனை செயற்படுத்தி முடித்த என் எஜமானன் இயேசுவுக்கு கோடான கோடி நன்றிகள்.

பொருளடக்கம்

அக்கினியிடமிருந்து

இயேசு இல்லாத இடம்

அனல் மூட்டும் அக்கினிப் பொறிகள்

இயேசுவின் அன்பே உன்னை வாழவைக்கும் மறந்துவிடாதே

வேதாகமத்தில் உள்ள பெண்கள் இவர்கள் இதில் நீ யார்?

இயேசுவோடு வாழ்கிறாயா

குறுக்கெழுத்துப்போட்டி 05

வினா விடை 05

சுவிசேஷ ஊழியம்

எல்லா புகழும்; துதியும்; கனமும்
என் நேசருக்கே உரியது.

அக்கினியிடமிருந்து...

அழைப்பின் ஆயத்த ஸ்தானம்

கிறிஸ்துவுக்குள் எனக்கன்பான அக்கினியின் வாசக உள்ளங்களே மறுபடியும் இச்சஞ்சிகைமூலம் உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி.

இவ்வக்கினிச் சஞ்சிகையை வாசிக்கும் உங்கள் ஒவ்வொருவருடைய உள்ளங்களிலும் பரிசுத்த ஆவியானவர் அசைவாடுவது மட்டுமல்லாமல் உங்களைச் சுற்றிலும் அக்கினிமயமான வேலியைப் பாதுகாப்பைக் கர்த்தர் வைத்திருப்பார் என விசுவாசிக்கிறேன். நம் வேண்டுதலும் அதுவே.

அன்பானவர்களே!

தேவன் தம்முடைய காரியங்களுக்காக நம்மை முன்குறித்து நம்மைத் தெரிந்துகொண்டுள்ளார். அவ்வழைப்பின் தெரிந்துகொள்ளுதலை நாம் உணர்ந்துகொண்டு அதன்படி செய்ய கவனமாயிருக்கிறோமா? நம்முடைய தேவன்,

எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்.

ரோமர் 8 : 30

அதாவது தேவன் ஒருவனை முன்குறித்துவிட்டால், அவனைத் தெரிந்து கொண்டுவிட்டால் அவனைத் தன் பக்கம் இழுத்து அவனைக்கொண்டு தான் செய்ய நினைத்த காரியத்தை நிச்சயம் செய்துமுடிப்பது மட்டுமல்லாமல் அவனை உயர்த்தி மகிமைப்படுத்துவார் என்பது கண்கூடு.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்து மீட்டெடுத்து அவர்களை நடத்துவதற்கு ஏற்ற தலைவனாக முன்குறித்த பாத்திரமே மோசே. தாயின் கருவில் தோன்றும் முன்னே தெரிந்துகொண்டேன் என்ற வார்த்தையின்படி தேவன் மோசேயை தாயின் கருவிலே தோன்றுவதற்கு முன்னமே முன்குறித்துவிட்டார். ஆகவே தேவன் மோசேயைக் கொண்டு செய்யவேண்டும் என நினைத்த காரியங்களைச் செய்தும் முடித்தார். ஏனெனில் மனம் மாற அவர் ஒரு மனுபுத்திரன் அல்லவே.

மோசேயை முன்குறித்த தேவன் நம்மையும் முன்குறித்திருக்கிறார். ஆகவே நம்மையும் நடத்த வல்லமையுள்ளவர் அவர் ஒருவரே.

தேவனுக்கு ஊழியம் செய்வதென்றாலே சத்துருவுக்குப் பிடிக்காது. எனவே தான் மோசேயை பிறப்பதற்கு முன்னமே அழிக்க வகை தேடினான். ஆனால் முன்குறித்தது கர்த்தராயிற்றே கைவிடுவாரா?

அப்பொழுது பார்வோன், பிறக்கும் ஆண் பிள்ளைகளையெல்லாம் நதியிலே போட்டுவிடவும், பெண் பிள்ளைகளையெல்லாம் உயிரோடே வைக்கவும் ஜனங்கள் எல்லோருக்கும் கட்டளையிட்டான்.

யாத்திராகமம் 1 : 22

மோசேயை அழிக்க சத்துரு பார்வோன் மூலம் செயற்பட்டான். ஆனால் தோற்றுப்போனான்; தேவன் அற்புத விதமாய் மோசேயைப் பாதுகாத்து சகல துறைகளிலும் வல்லவனாக்கி அவனை வளரப்பண்ணினார்; எவன் எதிர்த்தானோ அவன் வீட்டிலேயே அவனை வளரப் பண்ணினார் கர்த்தர்.

நம்மையும் தேவன் முன்குறித்திருக்கிறார். சத்துரு நமக்கும் பாடுகள்; வேதனைகள், நெருக்கங்களைத் தரலாம்; ஆனால் நாம் சோர்ந்து போகக்கூடாது; ஏனெனில் அழைத்தவர் கைவிடமாட்டார்; நம்மைக்கொண்டு செய்யவேண்டியவற்றைச் செய்து முடித்தே தீருவார்.

மோசேயை முன்குறித்த தேவன் அவரை பின்தொடர்ந்துகொண்டே வருகிறார். மோசே தன்னை தேவன் பயன்படுத்தப் போகிறார் என்பதை உணர்ந்தானோ இல்லையோ தேவன் மோசேயை மறக்கவில்லை.

ஒருமுறை மோசே தன் மாமனுடைய ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தபோது எரிகின்ற ஒரு முட்செடியினுடைய அக்கினியின் நடுவிலிருந்து தேவன் மோசேயை அழைக்கின்றார் (யாத்திராகமம் 3 : 1 - 4)

மோசேயை முன்குறித்த தேவன் அவரை தன் ஊழியத்திற்கு அழைக்கும் நேரமது. தேவ சித்தம் செய்யும் காலமது, மோசேயின் அழைப்பின் ஆயத்த ஸ்தானமது.

மோசே, மோசே என்றழைத்த தேவனுக்கு இதோ அடியேன் என்றார் மோசே. தேவன் தன்னுடைய திட்டத்தை, அவனைப் பயன்படுத்தப்போகிற காரியத்தைக் குறித்துப் பேசவிரும்பினார்.

மோசேயை முன்குறித்தவர் அவரை அழைத்தார் அழைத்தபோது மோசே அருகில் செல்ல,

அப்பொழுது அவர் : இங்கே கிட்டிச் சேராயாக; உன்கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி என்றார்.

யாத்திராகமம் 3 : 5

தேவனை கிட்டிச் சேருவதற்கு தேவன் பரிசுத்தத்தை விரும்புகிறார். ஏனெனில் தேவன் பரிசுத்தராயிருக்கிறதுபோல நாமும் பரிசுத்தமாய் இருக்கவேண்டும் என விரும்புகிறார். தேவ அழைப்பை தேவ காரியத்தை நிறைவேற்ற முதல் நாம் பரிசுத்தமாகுவது அவசியமாயிருக்கிறது. தேவன் மோசேக்குக் கூறிய வார்த்தைகளி லிருந்து நாம் இதனை உணர்ந்துகொள்ளமுடியும். மோசேயை முன்குறித்த தேவன் அவரை அழைத்து நீதிமானாக்கித் தனது அழைப்பை மோசே மூலம் தேவன் நிறைவேற்றி முடிக்கிறார்.

தன் திட்டத்தை மோசேயின் வாழ்வில் சரிவரச் செய்கிறார் கர்த்தர். மோசேயைக்கொண்டு மிகப்பெரிய அளவில்லாத அநேக அற்புத அதிசயங்களைச் செய்கிறார் கர்த்தர்; இதன்மூலம் மோசேயை மகிமைப்படுத்தவும் கர்த்தர் தவறவில்லை; மோசேயைக் குறித்து வேதம் தேவனுடைய வீட்டிலெங்கும் உண்மையுள்ளவன் எனக் கூறுமளவிற்கு கர்த்தர் அவனை உயர்த்தினார்.

எனக்கன்பானவர்களே! மோசேயைப்போல நம்மை முன்குறித்த தேவன் இன்று அக்கினியின் நடுவிலிருந்து நம்மை அழைக்கிறார். நம்மை தாயின் கருவினில் தோன்றும் முன்னே தெரிந்துகொண்டவர் நம்மைப் பெயர் சொல்லி அழைக்கிறார்; அழைப்பின் ஆயத்த ஸ்தானத்தில் நிற்கும் நாம் அவர் அழைப்பை ஏற்றுக்கொண்டு பரிசுத்தத்தோடு அவரிடம் சேருகிற பொழுது அவர் நம் வாழ்விலுள்ள திட்டங்களை நிறைவேற்றுவார்; நம்மைக்கொண்டு பெரிய காரியங்களைச் செய்வார்; நம் பெயரைப் பெருமைப்படுத்தி நம்மை மகிமைப்படுத்துவார்.

தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடை படாது.

யோபு 42 : 02

ஆசிரியர்

சிறுவர் பகுதி

இயேசு இல்லாத இடம்

"அக்கா சாரு எங்கே" என்று கேட்டுக்கொண்டே தன் சகோதரி இருந்த பூந்தோட்டத்தை நோக்கிச் சென்றான் நிது.

"அவனா அவன் எங்கேயும் அவன்ர நண்பர்களோட சுத்தப் போயிருப்பான்" என்று பதிலளித்தவாறே தன்னருகில் உட்கார இடம் கொடுத்தாள் அக்கா அபி.

அபி, ஷாரு, நிது மூவரும் சகோதரர்கள். மூவரிலும் ஷாரு கொஞ்சம் வித்தியாசமானவன். ஆலயத்திற்குச் செல்லமாட்டான். தீய நண்பர்களின் சேர்க்கை, கூடாத பழக்க வழக்கங்கள் என அவனது வாழ்க்கை காணப்பட்டது.

ஆனால் அபி, நிது இருவரும் ஷாருவுக்கு நேர் எதிரானவர்கள். ஒழுங்காக ஆலயம் செல்வார்கள். நல்ல நண்பர்களோடு சேருவார்கள். பெரியவர்களிற்குக் கீழ்ப்படிந்து நல்ல பழக்க வழக்கங்களோடு படிப்பிலும் கெட்டிக்காரர்களாய் வளர்ந்து வந்தார்கள்.

ஷாருவின் பழக்க வழக்கங்கள் அபிக்கும் நிதுவிற்கும் கொஞ்சங்கூடப் பிடிப்பதில்லை. அவனைத் திருத்துவதற்கு எவ்வளவோ முயற்சி எடுத்துங்கூட அவர்களால் முடியவில்லை.

"டேய் நிது! இந்த ஷாருவ என்ன தான்டா செய்யறது" என்று கேட்டாள் அபி.

"அதுதான் அக்கா எனக்கும் தெரியல அம்மா பாவம் எங்கள கஷ்டப்பட்டு வளர்க்கிறா ஆனா இவன் கீழ்ப்படியாம திரியறான்" என்று நிது சொல்லிக் கொண்டிருக்கும்போதே அங்கு வந்தான் ஷாரு.

"இதோ ஷாரு வாரான், எங்கடா போய்ட்டு வாராய்" என்று கேட்டாள் அக்கா.

"எங்க போயிருப்பான் யாரும் தெருப் பையன்களோட சேர்ந்து பீடி குடிச்சிட்டுத் தெருவில திரிஞ்சிட்டு வருவான் இதோ பீடி மணக்குது" என்று கூறிய நிதுவைப் பார்த்து முறைத்தான் ஷாரு.

"டேய் தம்பி பீடி குடிக்கிறது தீய நண்பர்களோட பழகிறது பெரியவங்க சொற்படி நடக்காதது எல்லாம் பாவம் என்று உனக்குத் தெரியாதாடா? பாவம் செய்தா நாங்க இயேசப்பாவின் பிள்ளையா இருக்கமுடியாது. இதெல்லாவற்றையும் விட்டு விலகி இயேசப்பாவுக்குப் பிரியமா வாழுடா" எனச் செல்லமாக அறிவுரை சொன்னாள் அபி.

"ஏய் இந்த பாரு! என்ன இரண்டு பேரும் மாறி மாறி நிறையவே பேசுறிங்க. எனக்கு சந்தோஷம் தாறது எதுவானாலும் நான் அத செய்வன். இந்த பாவம் இயேசு அதெல்லாம் உங்களுக்குத்தான். நான் இதெல்லாம் நம்பமாட்டன். எங்க பார்த்தாலும் இயேசு, இயேசு என்று கொண்டு இருக்கிறாங்க நான் இயேசு இல்லாத இடத்தைக் கண்டுபிடிச்சு அங்க வாழப்போறன் உங்களோட எனக்குச் சரிவராது" என்றுகொண்டு வீட்டைவிட்டு இயேசு இல்லாத இடத்தைத் தேடிச் சென்றான் ஷாரு.

திகைத்துப் போன அபியும் நிதுவும் தாயிடம் ஓடிவந்து நடந்ததை விபரித்தனர். தாய் மிகவும் வேதனையுடன் கண்ணீரோடு ஷாருவுக்காக ஜெபித்தாள். அவனுக்கு எந்த ஆபத்துமில்லாமல் மனந்திரும்பி வரவேண்டும் என்பதே தாயின் வேண்டுதல்.

வீட்டைவிட்டு வெளியேறிய ஷாரு பஸ் ஒன்றில் போய் ஏறி அமர்ந்து கொண்டான். "அப்பா ஒரு மாதிரி வெளிய வந்தாச்சு இனி இயேசு இல்லாத ஒரு இடமா போய் சந்தோஷமாய் இருக்கவேண்டியது தான்" என சிந்தித்துக்கொண்டே பயணித்துக்கொண்டிருந்த ஷாருவை "தம்பி" என யாரோ கூப்பிடும் சத்தம் கேட்கவே நிமிர்ந்து பார்த்தான் ஷாரு.

தம்பி இயேசு உன்னை நேசிக்கிறார் என்று கூறியவாறே துண்டு பிரதியை நீட்டிக்கொண்டிருந்த நபரைப் பார்த்ததும் அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. "யோ... என்னையா உனக்கு வேணும் பஸ்ஸிலயாவது நிம்மதியா போக விடமாட்டிங்களாய்யா" எனக் கத்தியவாறு பஸ்ஸை நிறுத்தி இறங்கினான் ஷாரு "சும்மா இயேசு இயேசு என்றுகொண்டு" என முணு முணுத்தவாறே ஒரு கடைக்குள் சென்று சாப்பிட அமர்ந்துகொண்டான் ஷாரு.

அமர்ந்திருந்து உணவை எடுத்து உண்ணமுற்பட்ட ஷாருவின் காதினில் "என் இயேசு உன்னைத் தேடுகிறார். இடமுண்டோ மகனே உன்னுள்ளத்தில்" என்ற பாடல் கேட்கவே ஆ... இங்கேயுமா ஊரு விட்டு ஊரு தாண்டி வந்தா இங்கேயும் அந்த இயேசுவோ எனக் கூறிக்கொண்டே வெளியேறினான் சாரு.

கோபத்துடன் தெரு வழியே நடந்து சென்ற ஷாரு ஒரு அழகிய பூங்காவைக் கண்டு அங்கே நுழைந்து கொண்டான். அங்கே போய் அதின் அழகை இரசித்துக் கொண்டிருந்தான் சாரு. அப்போது இரு சிறுமியர் ஏய் இங்க பார்த்தியாடி இந்த மரத்தை இயேசப்பா எவ்வளவு அழகா படைச்சிருக்கிறார். ஆமாண்டி இந்தப் பூவும் கூட இயேசப்பாவின் அழகான படைப்புகளில் ஒன்று தான்டி எனப் பேசிக் கொண்டிருந்தனர். இதைக் கேட்ட சாருவுக்குக் கோபம் தலைக்கேறியது என்ன செய்வதென்று தெரியாமல் "அட சீ. எங்க போனாலும் அவருடைய பேர் தான். யார பார்த்தாலும் இயேசு இயேசு என்றானுங்க இந்த இயேசு இல்லாத இடமே இல்லையா? ஏன் தான் இந்த இயேசு என்னைத் தொடர்ந்து வாராரோ" என்று கூறிக்கொண்டே கடற்கரையில் போய் அமர்ந்துகொண்டான்.

அப்பொழுது அங்கு வந்த கப்டனைப் பார்த்த சாரு "ஐயா! எனக்கொரு வழி காட்டுவீங்களாய்யா அங்க நான் போகனும்" என்று கூறினான்.

"சொல்லு தம்பி தெரிஞ்சா காட்டுறன்" எனக் கூறினார் கப்டன்.

"ஐயா இயேசு இல்லாத இடம் தெரியுமாய்யா? தெரிஞ்சா சொல்லுங்க நான் அங்க போகனும்" என்று கூறினான் ஷாரு.

"இயேசு இல்லாத இடமா, ஒன்று இருக்குப்பா" என்று கூறி முடிக்கும் முன்பே "எங்கய்யா எங்க" என்று ஆவலுடன் கேட்டான் ஷாரு.

இயேசு இல்லாத ஒரேயொரு இடம் நரகம் தான் தம்பி. அங்க இயேசு இருக்கமாட்டார். அதனால சந்தோஷம் இருக்காது அழுகையும் வேதனையும் துன்பமும் தான் இருக்கும். அங்க புழுக்களும் அசுத்தமான காரியங்களும் எரிகிற நெருப்பும் பேய்களும் தான் இருக்கும். நீ அங்க போகப்போறியா தம்பி?" என்று கேட்டார். கப்டன்.

அப்பொழுதுதான் தன் தவறை உணர்ந்தான் ஷாரு. உடனே முழங்கால் படியிட்டு இயேசுவிடம் மன்னிப்புக்கேட்டான். மனந்திரும்பிய ஷாரு கப்டனுக்கு நன்றிகூறி வீடு விரைந்தான்.

வீட்டிற்குச் சென்ற ஷாரு தன் தாயிடமும் சகோதரர்களிடமும் மன்னிப்புக் கேட்டு நடந்தவற்றை அவர்களுக்கும் விபரித்துச் சொன்னான். அவர்களும் இயேசுவிற்கு நன்றி கூறி அவனை மன்னித்துக் கட்டியணைத்துக்கொண்டனர்.

அவர்கள் வீடு மகிழ்ச்சியால் நிரம்பியது. ஷாருவும் அபி, நிதுவைப்போல் இயேசப்பாவின் பிள்ளையாகிக் கீழ்ப்படிந்து நல்ல நண்பர்களோடு சேர்ந்து சந்தோஷமாய் வாழ்ந்து வந்தான்.

அன்பான குட்டி தம்பி தங்கையே நீயும் இயேசப்பாவிற்குப் பிரியமில்லாத பாவமான காரியங்களைச் செய்தால் அதைவிட்டு விலகி அவரிடம் மன்னிப்புக்கேட்டு இயேசப்பாவிற்கும் பெரியவர்களுக்கும் கீழ்ப்படிந்து நடக்கக் கற்றுக்கொள். இயேசப்பா உன்னையும் ஆசிர்வதிப்பார்.

T. Prashath.

குறுக்கெழுத்துப் போட்டி 04, வினா - விடை 04 இற்கு மிகச் சரியான விடையெழுதி பரிசில் பெறுபவர்.

V. நித்தியா
மகாறம்பைக் குளம் வவுனியா.

அனாப்ரூட்டேய அக்கினிப் பொறிகள்

[illegible]

இன்ய நாவு எனும்பை
நொருக்கும்

[illegible]

உன் சத்துருகளை
சிநேகி

[illegible]

அதிக தூக்கம்
தரித்திரத்துக்கு வழி

[illegible]

பிரம்பும்
கடிந்துகொள்ளுதலும்
ஞானத்தைக் கொடுக்கும்

[illegible]

உண்மையுள்ளவன்
பரிபூரண ஆசீர்வாதத்தின்
பங்காளன்

[illegible]

தேவனுக்குப் பயப்படுதல்
ஞானம்

[illegible]

கோபம் கொண்டானும்
பாவம் செய்யாதே

[illegible]

தேவனுக்கு உன்
இதயத்தைக் கொடு

வாலிபர் பகுதி

இயேசுவின் அன்பே உன்னை வாழவைக்கும் மறந்துவிடாதே!

பிரியமானவர்களே!

இந்தச் சஞ்சிகை ஊடாக வாலிபர்களான உங்களைச் சந்திப்பதில் பெரும் மகிழ்வு அடைகிறேன்.

அன்பானவர்களே இன்றைய உலகில் பல்லாயிரக்கணக்கான வாலிபர்கள் மெய்யான அன்பு எது என்றும், எங்கு சந்தோஷம் உண்டென்றும் தெரியாமல் உலக மாயைக்குப்பின்னால் ஓடுகிறார்கள். மதுபோதையை ஒரு சந்தோஷமாகவும் காதலை அன்பாகவும் எண்ணியவர்களில் அநேகர் எல்லாவற்றையும் இழந்து காணப்படுகிறார்கள்.

பல வாலிபர்கள் கைவிடப்பட்ட தனிமையான நிலையும் அன்பில்லாதவர் களாயும் நிம்மதியற்ற வாழ்வினால், தற்கொலை எண்ணங்களோடு காணப்படுகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

இச்சஞ்சிகையை வாசிக்கும் வாலிப சகோதரனே! வாலிப சகோதரியே! இன்று உன்நிலை எப்படி இருக்கிறது. நீ யார்? உன்னை அன்பு செய்பவர் யார்? நீ அன்பு செய்வது யாரை? உன்னை வெறுத்துத் தள்ளிவிட்டவர்கள் யார்? நீ பலரது கால்களால் மிதிக்கப்பட உப்பாக இருக்கிறாயா?

என் இயேசு உன்னைப் பார்த்து என்ன சொல்லுகிறார் தெரியுமா?

நீ நெகிழப்பட்டதும் கைவிடப்பட்டதும் ஒருவரும் கடந்து போகாததுமாய் இருந்தாய். ஆனாலும் உன்னை நித்திய மாட்சிமையாகவும்; தலைமுறை தலைமுறையான மகிழ்ச்சியாகவும்; வைப்பேன்.

ஏசாயா 60 : 15

என் தாய் என் சகோதரர்கள் என் தந்தை எல்லாரும் என்னை வெறுத்து விட்டார்களே! என் உறவுகளும் என்னைச் சேர்த்துக்கொள்ளவில்லையே! என் நண்பர்களும் என்னைத் தள்ளிவிட்டார்களே என்று சொல்லி இனிமேல் என்ன அன்பு செய்ய யாருமில்லை என்கிற சகோதர, சகோதரியே! உன்னை நேசித்து தன் ஜீவனைக் கொடுத்து உன்னை மீட்டு உனக்காக ஒரு இடத்தை (பரலோகத்தை) ஆயத்தப்படுத்திய அந்த இயேசுவின் உயிருள்ள அன்பை நீ மறந்தது ஏன்?.

இன்று பல வாலிபர்களுக்குக் காதலில் ஏற்படும் தோல்விகள் / ஏதாவது தோல்விகளே அவர்களுக்குத் தங்கள் முடிவுகளாகத் தென்படுகிறது ஏன்? உன் வாழ்வில் இந்தத் தோல்வி.

ஒரு பெண்ணை / ஒரு ஆணை நீ காதலிக்கும்போது உனது உயிரைவிட மேலாக அவரை நேசிக்கிறாய் அல்லவா. அவருக்காக உயிரை இழக்கத் தயாராக உள்ளாயே! ஆனால் உனக்காக ஜீவன் தந்து உன்னை மீட்டெடுத்து வாழவைத்த அந்தத் தெய்வத்தை மறந்துவிட்டாயே!

உன் காதலன் / உன் காதலி உன்னை வெறுத்துத் தள்ளிவிடும்போது நீ அதை எண்ணி அழுதிருப்பாய். ஓ என் உயிரைவிட மேலாக அவளை / அவனை நேசித்தேனே! என் காதலுக்காக எல்லாவற்றையும் இழந்தேனே ஆனால் அவள் / அவன் என்னை மறந்துவிட்டாரே என்று சொல்லிக் கதறுகிறாய். சிலவேளை சாகவேண்டுமென்று நினைக்கிறாய்.

நீ உன் காதலியை / காதலனை எவ்வளவு நேசித்தாயோ அதைவிட மேலாக என் இயேசு உன்னை நேசிக்கிறார். அவர் எல்லாரையும்விட அதிகமாய் உன்னை அன்பு செய்கிறார்.

நீ அழும்போது உன் பெற்றோர், உன் நண்பர்கள் உன்னைப்பார்த்து அழாதே என்று சொல்லுவாங்க ஒருமுறை சொல்லுவாங்க இரண்டுமுறை சொல்லுவாங்க மூன்று அல்லது நான்கு முறை சொல்லுவாங்க. ஐந்தாவது முறை இவன் / இவளுக்கு ஒரே அழுகிறதுதான் வேலை என்று சொல்லிவிட்டு போயிடுவாங்க. ஆனால் என் இயேசு அப்படியல்ல நீ அழும்போது உனக்காக அவரும் அழுகிறார். உன்னைத் தேற்ற அவர் எவ்வளவு ஆவலாய் இருக்கிறார் தெரியுமா. உன்னுடைய செயற்பாடுகள் மற்றவர்களுக்குப் பிடிக்காததால் அவர்கள் உன்னை வெறுத்துத் தள்ளி விடுவார்கள் என் இயேசுவோ நீ எப்போது மனந்திரும்பித் தன்னிடம் வருவாய் என்று ஏங்கிக்கொண்டிருக்கிறார் தெரியுமா?

நீ எவ்வளவுதான் தெய்வத்தைவிட்டுத் தூரம் போனாலும் அவர் இன்னும் உன்னை நேசிக்கிறாரே அந்த அன்பு உன் உள்ளத்தை உடைக்கவில்லையா?

பிரியமான வாலிப சகோதரனே / சகோதரியே ஒருவிசை இயேசுவின் அன்பை ருசித்துப்பார் உன் வாழ்வு இன்பமாய் மாறும்.

தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.

யோவான் 3 : 16

S.J. Roxsman,
Mannar.

பெண்கள் பகுதி

வேதாகமத்தில் உள்ள பெண்கள் இவர்கள் இதில் நீ யார்?

01. ஏவாள் : சாத்தானால் ஏமாற்றப்பட்டாள். ஆதி 3:6
"ஏமாற்றப்பட ஆயத்தமா? அவர் சித்தம் செய்ய ஆயத்தமா?"

02. மரியாள் : இயேசுவினால் சாட்சி கொடுக்கப்பட்டவள்
சாட்சி 1. என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள்.
2. தன்னால் இயன்றதைச் செய்தாள்.
3. முந்திக்கொண்டாள் மாற் 14 : 6–9

03. அன்னாள் : மனக்கிலேசமுள்ள ஸ்திரி சாமு 1:15
"மனக்கிலேசம் உன்னிடத்தில் இருக்கின்றதா இதயத்தைத் திற, இயேசுவுடன் பேசு."

04. எஸ்தர் : தன் தேசத்திற்காகத் தானும் தாதியரும் உபவாசித்திருந்தவள். எஸ்4:16
"உன் தேசம் அழிகிறது உன் உறக்கம்தான் என்ன?"

05. ரூத் : மன உறுதியுள்ள பெண் ரூத் 1:18
"ரூத்தைப் பார் யேசுவைப் பற்றிக்கொள்"

06. ரெபேக்காள் : நீடிய பொறுமை. இரக்கம். பணிவு. கர்த்தரிடத்தில் விசாரிப்பவள். ஆதி 24:19-20 ஆதி 25:22
"ஆவிக்குரிய கனி உன்னிடத்தில் உண்டா, பரிசோதித்துப் பற்றிக்கொள் : எதையும் கர்த்தரிடம் கேட்டுச்செய்"

07. சாராள் : கர்த்தரால் வாக்குத்தத்தம் உறுதிப்படுத்தியும் உறுதியிலாமல் நகைத்தாள் ஆதி 18:12
"கர்த்தரின் வாக்கை அசட்டை பண்ணாதே"

08. ஆகார் : வனாந்திரத்தில் அலைந்தால், அழுதாள், ஆசீர்வாதம் பெற்றாள். ஆதி 21-12
"உன் வாழ்வு பாலைவனமா? பார் உன் தேவனை பெற்றுக்கொள் ஆசிர்வாதத்தை"

09. ராகேல் : தன் சொந்தச் சகோதரியின் மேல் பொறாமை கொண்டவள். ஆதி 30:1
"உன் சகோதரியுடன் பகையா? பாசமா? நிதானி"

10. பெத்தானியா மரியாள் : உலகத்தை மறந்தாள் - நல்ல பங்கைத் தெரிந்தாள் லூக்கா 10:42
"உலகமா, உயிரான இயேசுவா, சிந்திப்பாயா"

11. மார்த்தாள் : இயேசுவை மறந்தாளா? வேலையை மாத்திரம் நினைத்தாளா? லூக்கா 10:41
"மறப்பாயோ அல்லது நினைப்பாயோ, நினைவில் நிறுத்து"

12. சிப்பிராள். பூவாள் : தேவனுக்குப் பயந்தார்கள் நன்மையைப் பெற்றார்கள் யாத் 1:17, 20
"எப்போதும் பயந்திரு, எப்போதும் வாழ்ந்திடுவாய்"

13. லோத்தின் மனைவி : கர்த்தரின் சத்தம் கேட்டும் உணர்வற்ற நிலை விளைவு உப்புத்தூண் ஆனாள் ஆதி 19:26
"உலகத்தை மறந்திடு ஆலயத்தின் தூண் ஆகு"

14. ஏரோதின் மனைவி : அப்பாவுக்குப் பிறந்ததான் மகளுக்கு டான்ஸ் தாய்க்கு தாலத்தில் தலை வேண்டும் (ஊழியக்காரனின் தலையைக் கேட்டவள்) மாற் 6:17 - 28
"தாய் தன் எண்ணத்தை 1 நொடியில் மாற்றினாள் நீ தாய் ஆனால் 1 நிமிடத்தில் எதை மாற்றப்போகிறாய்"

15. போர்த்திபார் மனைவி : பிறன் மேல் ஆசைகொண்டு சொந்தக் கணவனுக்குப் பொய்யினால் சாதனை படைத்தவள் ஆதி 40:19
"சாதனையா சர்வ வல்லவரின் போதனையா தெரிந்துகொள்"

ஊழியம் பெண்களும் செய்தனர்
உறுதிப்படும் உண்மை வார்த்தைகள்

அப். 2:45 தங்கள் ஆஸ்திகளை ஊழியத்திற்குக் கொடுத்தனர்.
லூ. 24:10 இயேசுவின் உயிர்த்தெழுதலை முதல் முதல் கண்டவர்கள்
லூ. 23:55 இயேசுவோடு ஊழியம் செய்தவர்கள் பெண்கள்
அப். 1:14 மேல் வீட்டு அறையில் கூடி ஜெபித்தவர்கள்

எஸ்தர் மேரி (சித்திரா)
கிளிநொச்சி.

ஆண்கள் பகுதி

இயேசுவோடு வாழ்கிறாயா?

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே இச்சஞ்சிகைமூலம் உங்களைச் சந்திப்பதில் மிகுந்த சந்தோஷம்.

அன்பானவர்களே வேகமாகச் சென்றுகொண்டிருக்கும் உலகில் காலத்தின் வேகத்திற்கேற்ப நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையும் வேகமாகச் செல்கிறதா? அல்லது ஏதோ வாழ்க்கை போகிறது என்ற நிலையில் செல்கிறதா? சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்.

சுழலும் காலச் சக்கரத்திற்கேற்ப தேவனுக்காய் சாதனையாளர்களாய் தேவராஜ்ஜயத்தின் கட்டுமான வீரர்களாய் காணப்படவேண்டிய நாம் இன்று நமது காரியங்களிலேயும் தொழில்களிலும் மேலதிக கல்வி நடவடிக்கைகளிலும் அதிக கவனம் செலுத்துகிறவர்களாய் காணப்படுகிறோம்.

இவை அனைத்தும் நமக்கு முக்கியம் தான் நமக்கு தேவைதான் ஆனாலும் இவையெல்லாவற்றிற்கும் மேலாக நாம் தேவ காரியங்களிலேயும் சபையின் நடவடிக் கைகளிலேயும் அதிக கவனம் செலுத்தவேண்டியவர்களாய் காணப்படுகிறோம்.

சில வேளைகளில் நாம் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஆலயத் திற்குச் செல்கிறோம், ஆலயத்தில் ஏதாவது தேவைகள் என்று சொன்னால் பணம் கொடுக்கிறோம். காணிக்கை தசமபாகம் செலுத்துகிறோம் ஆகவே நாம் தேவனோடு கூட வாழுகிறோம் என்று நினைப்பதுண்டு.

பிரியமானவர்களே ஆலயம் செல்லவேண்டும் இல்லையேல் போதகர்களும் விசுவாசிகளும் தவறாக நினைப்பார்கள் என்பதற்காக ஆலயம் செல்வதும்; பணம் கொடுப்பதும்; நமக்குத் திருப்தியளிக்கலாம். நாம் தேவனுக்கு உண்மையாய் வாழுகிறோம்; இயேசுவோடுகூட வாழுகிறோம் என்ற எண்ணத்தை நமக்குத் தந்து விடலாம் ஆனாலும் அது உண்மையிலே நாம் இயேசுவோடு கூட வாழும் வாழ்க்கை யல்ல அது ஒரு மாயையான வாழ்வே தவிர தேவனுக்காய் உண்மையாய் வாழும் வாழ்வு அல்ல.

காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்கவேண்டிய உங்களுக்கு தேவனுடைய வாக்கியங்களின் முல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது.

எபிரேயர் 5 : 12

ஆம் எனக்கன்பானவர்களே காலத்தின் கனிவும் நமது ஆவிக்குரிய வயதின் முதிர்ச்சியும் நாம் ஆவிக்குரிய வாழ்க்கையில் தேவனுக்குள்ளாய் முதிர்ந்தவர்களாய் காணப்படவேண்டும் என்பதை நமக்கு வலியுறுத்துகிறது.

ஆனால் நாம் அவ்வாறு காணப்படுகின்றோமா என எண்ணும்போது அது சிந்திக்கப்படவேண்டிய விடயமே.

நாம் தேவராஜ்யத்தைக் கட்டுவதற்கு நம்மால் இயன்ற சிறு முயற்சிகளை செய்து நாமும் ராஜ்யத்தின் பங்காளிகளாக மாறலாம். நான் எப்படி இதிலெல்லாம் ஈடுபடமுடியும் எனக்குத்தான் நேரமில்லையே என்று எண்ணுவது தவறு நாம் தொழில் செய்யும் இடங்களில் கல்வி கற்கும் இடங்களில் ஒரு நாளில் நாம் எத்தனை பேரைச் சந்திக்கிறோம் அவர்களில் ஒருவருக்காவது இயேசுவைப் பற்றி அவரது அன்பைப் பற்றி நம்முடைய வாழ்வில் அவர் செய்த அற்புதங்களைப் பற்றிக் கூறமுடியுமல்லவா? அவ்வாறு கூறும்போது நாமும் தேவராஜ்யத்தின் பங்காளிகளாக மாறமுடியும் இயேசுவோடு கூட வாழமுடியும்.

நாம் பாவம் செய்யாமல் மட்டும் வாழ்ந்தால் அது கர்த்தருக்குப் போது மானதல்ல அவரின் சித்தமும் செய்யவேண்டும். ஏனெனில்,

பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே, பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.

மத்தேயு 7 : 21

பிதாவின் சித்தம் செய்வோம்
இயேசுவோடுகூட வாழ்வோம்.

T.Prashath

இயேசு ஒருவர்

கல்லிலிருந்து சிலைவடித்து கற்பனை உரு கொடுத்தது
கடவுள் என்று ஒன்றை உருவாக்கினான் ~ மனிதன்
அதில் காரணங்கள் பல சொல்லி கதைகளும் பல
சொல்லி கால்பித்தான் பல விடிவங்களை
உயிருள்ள தேவன் யேசு என்று வாழ்ந்திருந்தால்
இத்தனை உருவங்கள் எதற்காக மனிதா?

சித்திரத்தில் வரைந்தாலும் சுவரில் பதித்தாலும்
அவை அத்தனையும் வெறும் சிலைதானே மனிதா?
உலகத்தில் இருப்பவர் ஒருவர் அவர்தான் யேசு
நீ யாரை நேசித்தாலும் உன்னை நேசிப்பவர்
யேசு மட்டும் தானடா மனிதா?
இருக்கின்ற ஒரு வாழ்வை யேசுவுக்காய் வாழடா மனிதா?

J. Renuja

குறுக்கெழுத்துப் போட்டி 05



இடமிருந்து வலம்

1. ஆபிரகாமின் சகோதரன்
2. இவர் ஒரு நியாதிபதி
5. ஏமாற்றுகிறவன் என்று பொருள்படும்
6. இது ஒரு கோத்திரம்
7. புருஷனை அறியாத பெண்
8. இவர் இல்லாத வாழ்வு வீணானது (குழம்பி)
10. தேவன் .....யும் அந்தமுமானவர்
11. இது அதிகமானால் வாழ்வில் சாத்தான்களை விதைப்பான்

மேலிருந்து கீழ்

1. இது அநீதி நிறைந்த உலகம் என வேதம் கூறுகிறது.
3. இது ஒரு நதி
4. எகிப்தியரைக் கர்த்தர் இதன் மூலமும் வாதித்தார் (குழம்பி)
5. தோராக்களில் ஒன்று
6. யூதாவின் மருமகள்
7. சரீரத்தின் விளக்கு
9. எந்நேரமும் பரலோகில் இவர்கள் தேவனைத் துதிப்பார்கள் (கீழிருந்து மேல்)
10. கர்த்தரை சிலுவையில் அறைய பயன்பட்டது.

அன்பானவர்களே குறுக்கெழுத்துப் போட்டி 05, வினாவிடை 05 இற்கான மிகச் சரியான பதில்களை எழுதி 2012.07.20 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்குமாறு அனுப்பிவைக்கவும். மிகச் சரியான விடையெழுதும் 3 பேருக்குப் பரிசில்கள் அனுப்பி வைக்கப்படும். ஏனைய 10 பேரின் பெயர்கள் அக்கினியில் பிரசுரமாகும்.

வினா - விடை 05

01. ஸ்தேவான் எப்படி மரித்தான்?
02. மோவாப் சந்ததி தோன்றக் காரணமானவன் யார்?
03. யோசேப்பின் தாயின் பெயர் என்ன?
04. மோசேக்குப் பின் இஸ்ரவேலரை வழிநடத்தியவன் யார்?
05. சாலமோனை அபிஷேகம் பண்ணியது யார்?
06. ஏலியின் குமாரர் யாருடைய மக்கள் என வேதம் கூறுகிறது?
07. சாலமோனுக்குப் பின் ராஜ்யம் எத்தனை ராஜாக்களிடம் பிரிந்து போனது?
08. சீமோன் என்பதன் அர்த்தம் என்ன?
09. பலிபீடத்தண்டையில் கொல்லப்பட்டவன் யார்?
10. மூடனுடைய முதுகுக்கு ஏற்றது எது?

குறுக்கெழுத்துப்போட்டி 04 இன் விடைகள்

இடமிருந்து வலம்

1. ரூபன்
2. யோபு
3. வாசல்
4. சேத்
5. மரணம்
6. நாத்தான்
8. லாமேக்கு
10. பவுல்

மேலிருந்து கீழ்

1. ருத்
2. யோனத்தான்
3. வானம்
5. மக்பேலா
6. நாவு
7. தானியேல்
9. குகை

வினா விடை 05 இன் விடைகள்

01. சாதோக்
02. யோசியா
03. சாலமோன்
04. பெத்லெகேம்
05. மகிமையைக்
06. நகைப்பு
07. யோவான்
08. போவாஸ்
09. அனனியா, சப்பீராள்
10. தாவீது



கற்போர் கூடம்

சுவிசேஷ ஊழியம்

சுவிசேஷம்

மாம்சத்தில் வெளிப்பட்ட இயேசு கிறிஸ்துவே உண்மைத் தெய்வம் அல்லது அவர் ஒருவரே கடவுள் என்பதை வெளிப்படுத்துவதே சுவிசேஷமாகும்.

அன்றியும் தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக் கொள்ளுகிறபடியே மகா மேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார்...

(I தீமோத்தேயு 03 : 16)

பயப்படாதிருங்கள்: இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்.
இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்.

(லூக்கா 2 : 10, 11)

மேற்கூறிய காரியங்களிலிருந்து நமக்குத் தெரியவரும் உண்மை என்ன? கடவுள் மாம்சத்தில் வெளிப்பட்டார் அப்படியாயின் அவர் யார்? அவர் தான் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து, அவர்தான் ஆண்டவர் ஆகவே அவரே உண்மை தெய்வம், இச்செய்தியே சுவிசேஷமாகும்.

நித்திய சுவிசேஷம் அல்லது சுவிசேஷ செய்தியில் வெளிப்படுத்தப்படவேண்டிய செய்திகள்

அவன் □மியில் வாசம் பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும்: கோத்திரக்காரருக்கும்: பாஷைக்காரருக்கும்: ஜனக் கூட்டத்தாருக்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தை உடையவனாயிருந்தது, மிகுந்த சந்தமிட்டு : தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்: அவர் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் வேளைவந்தது: வானத்தையும் □மியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுக்களையும் உண்டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்கள் என்று கூறினான்.

(வெளிப்படுத்தல் 14 : 6, 7)

ஆகவே,

i. தேவனுக்குப் பயப்படுதல்
ii. தேவனை மகிமைப்படுத்தல்
iii. நியாயத் தீர்ப்பின் வேளை என்கிற அறிவு
iv. தேவனைத் தொழுதுகொள்ளுதல்

Ps. S. Horusikan

i. தேவனுக்குப் பயப்படுதல்

தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம்.

(நீதிமொழிகள் 08 : 13)

அதாவது, சுவிசேஷம் அறிவிக்கும்போது தீமையை வெறுத்துக் கடவுளுக்குப் பயந்து வாழவேண்டும். என்று கூறவேண்டும். மட்டுமல்லாது சுவிசேஷம் அறிவிப்பவனும் தேவனுக்குப் பயந்து காணப்படவேண்டும்.

ஏன் நாம் தேவனுக்குப் பயப்படவேண்டும்?

உமக்குப் பயப்படும்படிக்கு உம்மிடத்தில் மன்னிப்புண்டு.

(சங்கீதம் 130 : 04)

அதாவது தீமையை வெறுத்துக் கடவுளுக்குப் பயந்து வாழும்போதுதான் அவர் நம்முடைய பாவங்கள் குற்றங்களை எல்லாம் மன்னிப்பார். எனவே தான் நாம் அவருக்குப் பயப்படவேண்டும். எனக் கூறவேண்டும்.

ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்கவல்லவருக்கே பயப்படுங்கள்.

(மத்தேயு 10 : 28)

இயேசு கிறிஸ்து நமக்காகப் பிறந்து நமது பாவ சாபத்துக்காக அவர் மரித்து, மீண்டும் நம்மைத் தம்மோடு சேர்த்துக்கொள்ள எழுந்து இனி நம்மை நம்முடன் பரலோகில் வாழும்படி அழைத்துச் செல்லவர இருக்கிறதினாலே நாம் அவரே தேவன் என்று விசுவாசித்துக் காணப்படவேண்டும் என்று காண்பிக்கவேண்டும்.

நாம் தேவனுக்குப் பிரியமில்லாத வாழ்வு வாழும்போது அவர் நம்மை நரகத்திலே தள்ள அவருக்கு அதிகாரம் உண்டு. ஏனெனில் நம்மேல் அவருக்குப் பூரண அதிகாரம் உண்டு என்பதைத் தெளிவுபடுத்தவேண்டும். நாம் சுவிசேஷம் அறிவிக்கும்போது முதலாவது ***நாம் தேவனுக்குப் பயந்தவர்களாய் காணப்படும் அதேவேளை அறிவிப்பவர்களுக்கும் தேவ பயத்தை உண்டாக்கவேண்டும்.***

அஸ்தமனமற்ற வாழ்க்கை

ஓய்வுநாள் பள்ளி ஊழியம்

சிகாகோவின் வட பகுதியிலிருந்த சேரிகளில் வசிக்கும் சிறு பிள்ளைகளின் பரிதாபகரமான நிலையைக் கண்டு மூடி அவர்களுக்காக அனுதாபப்பட்டார். அவர்களும் இயேசுவின் அன்பைப்பற்றி அறிய வேண்டுமென்று மூடி விரும்பினார்.

ஃபர்ஸ்ட் பாப்பிஸ்ட் ஆலயத்தைச் சேர்ந்த ஓர் அம்மையார் அவர்களது ஆலயத்தின் சார்பில் வட பகுதியில் நடத்தப்படும் அருட்பணி ஓய்வுநாள் பள்ளிக்குச் சென்று பார்க்கும்படி மூடியிடம் ஆலோசனை கூறினார்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை மூடியும், மற்றொருவரும் ஆற்றைக் கடந்து வெல்ஸ் தெருவிலிருந்த அந்த அருட்பணி நிலையத்துக்குச் சென்றார்கள்.

சிறு பிள்ளைகளுக்கு நற்செய்தி அறிவிக்கத் தனக்கு வாய்ப்புக் கொடுக்கும்படி மூடி அந்த ஓய்வுநாள் பள்ளித்தலைவரிடம் கேட்டுக்கொண்டார்.

"இங்கு வந்து சேரும் பிள்ளைகளின் எண்ணிக்கைதான் குறைவாக இருக்கிறது. எனவே புதிய மாணவர்களைச் சேர்ப்பதுதான் முதல்பணி" என்றார் அந்தத் தலைவர்.

தானே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதாகக் கூறிய மூடி உடனே சேரியின் சிறுவர்களைச் சந்திக்கப் புறப்பட்டார்.

ஜிம்மி செக்ஸ்டன் என்பவன் சேரியைச் சேர்ந்த, குறும்பு செய்யும் சிறுவர்களில் ஒருவன். ஞாயிற்றுக்கிழமை காலையில் அவன் மூன்று நான்கு சிறுவர்களைச் சேர்த்துக்கொண்டு தெருவில் விளையாடிக்கொண்டிருந்தான்.

அப்போது கட்டம் போட்ட துணியிலான கோட்டும் சூட்டும் அணிந்த மூடி அவர்களை அணுகினார். அவரது தலைமயிர் ஒட்ட வெட்டப்பட்டிருந்தது. உறுதியான உடல்!

பரட்டைத் தலையுடனும், கிழிசல் ஆடைகளுடனும் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களைவிட அவர் முற்றிலும் வேறுபட்டவராகத் தெரிந்தார்!

ஆனால் அவரது அன்பும், புன்னகையும் தவழ்ந்த முகத்தைக் கண்ட சிறுவர்கள் ஓடிச் செல்லவில்லை.

"பையன்களே, நீங்கள் என்னுடன் ஓய்வுநாள் பள்ளிக்கு வருகிறீர்களா?" என்று அன்போடு நட்புணர்வுடன் கேட்டார் மூடி.

"வந்தால் பிக்னிக் கூட்டிச் செல்வீர்களா?" என்று கேட்டான் ஜிம்மி.

"வந்து பாருங்களேன். ஒருநாள் நாம் பிக்னிக்கூடப் போகலாம்" என்றார் மூடி.

ஜிம்மி தனது நண்பர்களையும் உடன் சேர்த்துக்கொண்டான். அன்று பதினெட்டு சேரிச் சிறுவர்களை ஓய்வுநாள் பள்ளிக்கு மூடி அழைத்து வந்தார்! அவர்களில் பெரும்பான்மையோருக்குக் காலணி கூடக் கிடையாது!

"இதுவரை நான் கண்ட ஞாயிற்றுக்கிழமைகள் எல்லாவற்றிலும் அதுவே எனக்கு மிகவும் மகிழ்ச்சியான நாள். எனது ஊழியம் எதுவென்பதை நான் கண்டுகொண்டேன். என்னால் மற்றவர்களுக்குப் போதனை செய்ய முடியாவிட்டாலும், கிறிஸ்துவைப் பற்றி அறிந்துகொள்ளும்படி அவர்களை என்னால் அழைத்துவர முடிகிறது" என்று மூடி இதைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பதினெட்டு சிறுவர்களும் தொடர்ந்து அந்த ஓய்வுநாள் பள்ளிக்கு வரத் துவங்கினார்கள். அவர்களில் ஜிம்மி என்பவன் மூடி பின்னர் சொந்தமாக ஓய்வுநாள் பள்ளி ஒன்றைத் துவங்கி நடத்தியபோது, அவரது ஊழியத்திலும் உதவியாக இருந்திருக்கிறான்.

இந்தச் சிறுவர்களை மட்டுமின்றி, மேலும் நூற்றுக்கணக்கான சிறுவர் சிறுமியரையும் மூடி ஓய்வுநாள் பள்ளிக்கு அழைத்துவந்திருக்கிறார். சேரியில் ஒவ்வொரு வீடாகத் தயங்காமல் நுழைந்து பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்வது மூடியின் வழக்கம்!

ஒருமுறை பிள்ளைகளை அழைப்பதற்காக ஒரு வீட்டினுள் மூடி நுழைந்தார். பிள்ளைகளின் தகப்பனார் ஒரு மதுப்புட்டியைத் திறந்து வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தார்.

மூடி அந்த மதுப்புட்டியை எடுத்து அதிலிருந்த விஸ்கியைத் தெருவில் கொட்டிவிட்டுத் திரும்பி வந்துவிட்டார்!

அடுத்த வாரம் மூடி மறுபடியும் அந்த வீட்டுக்குச் சென்றார். அங்கே அந்தத் தகப்பனார் அவருக்காகக் காத்திருந்தார்!

மூடியைக் கண்டவுடன் அவரது சட்டையைப் பிடித்திழுத்து, அவரை அடிப்பதற்காகக் கையை ஓங்கினார்.

"நான் உமது நன்மைக்காகவும் உமது குடும்பத்தாரின் நலனுக்காகவுமே அந்த மதுவைத் தரையில் கொட்டினேன். அதற்காக நீர் என்னை அடிக்க விரும்பினால், என்னை அடிக்கத் துவங்கு முன்பு நான் உமக்காக ஜெபிக்க விரும்புகிறேன்" என்று கூறிய மூடி அங்கேயே முழங்காற்படியிட்டார்.

அந்தத் தகப்பனாருக்காகவும் தாயாருக்காகவும் பிள்ளைகளுக்காகவும் முழுமனதோடு உருக்கமாக ஜெபித்தார்.

அவர் ஜெபித்து முடிக்கும்போது அந்தத் தகப்பனாரின் கோபம் தணிந்திருந்தது. பிள்ளைகளை ஓய்வுநாள் பள்ளிக்கு அழைத்துச் செல்ல அவர் அனுமதி கொடுத்தார்!.

தொடரும்.

சற்று நில்லுங்கள் இதை சிந்தியுங்கள்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

நீங்கள் இச்சஞ்சிகைமூலம் மிகவும் பயன் அடைந்திருப்பீர்களென்று விசுவாசிக்கின்றேன். நிச்சயமாக பரிசுத்த ஆவியானவர் உங்களோடு கூட உறவாடிமிருப்பார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனாலும் பிரியமானவர்களே தேவனிடத்தில் இருந்து நன்மையைப் பெறுகிற நாம் அந்த தேவனை பிரசித்தம் பண்ணுவது நம்மேல் விழுந்த கடமை. நிச்சயமாக நாம் ஒரு மனிதனையாவது தேவனுடைய பரலோக இராஜ்ஜியத்திற்கு பங்குடையவனாய் மாற்றவேண்டும். ஏனெனில்,

இவ்விதமாக இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருந்திருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல.

மத்தேயு 18 : 14

ஆம் பிரியமானவர்களே ஒருவரும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைவதே என் அருமை அப்பாவின் சித்தம். எனவே இவ்வுலகில் அழிந்துபோகும் ஆத்துமாக்களை தேவன் பக்கம் திருப்ப நம் ஒவ்வொரு வரையும் அழைத்திருக்கின்றார். அழைத்த அழைப்பிற்கு உண்மையானவர் களாகக் காணப்படவேண்டும்.

அதுபோல,

மனந்திரும்புகிற ஒரே பாவியனிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாமிருக்கும் **ஊக்கா 15:7**

சகோதரனே, சகோதிரியே, இப்பொழுது நீ ஆயத்தப்படு. எப்படியாவது நான் ஒருவரை தேவனுக்குள் நடத்தவேண்டும். கர்த்தர் என்னிடம் எதிர்பார்க்கும் என் கடமையை நான் செய்யவேண்டும் என தீர்மானம் பண்ணி உன் கடமையை சரிவர செய். கர்த்தர் உன்னோடு இருப்பார். இதோ உங்களுக்காக உங்கள் அக்கினி இதழுடன் கூட உங்களுக்கு ஒரு துண்டுபிரசுரம் கிடைத்திருக்கும். நீங்கள் செய்யவேண்டியது, உங்களுக்குக் கிடைத்த அந்தத் துண்டுப் பிரசுரத்தை உங்கள் நண்பர் அல்லது அயலவரிடம் கொடுத்து இயேசு கிறிஸ்துவை பிரசித்தம் பண்ணுங்கள். ஏனெனில் உங்களில் இருக்கும் அக்கினி அவர்களையும் பற்றும். அவர்களுக்காகத் தொடர்ந்து ஜெபியுங்கள். இரட்சிப்பு கர்த்தருடையது. கர்த்தர் காரியங்களை வாய்க்கப் பண்ணுவார். நாங்களும் உங்களுக்காக ஜெபிப்போம்.

மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். **ஊக்கா 15 : 10**

அக்கினியின் பங்காளராக மாற நீங்கள் விரும்பினால் கீழ்த்தரப்பட்ட விடயங்களை சொந்தக் கையெழுத்தினால் எழுதி தபால் மூலமோ நேரடியாகவோ அனுப்பி வைக்கலாம் அல்லது எமது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

அக்கினியின் பங்காளர் Membership of fire

பெயர் : .....

Name : .....

பிறந்த திகதி : .....

Date of Birth : .....

பால் : ஆண் ❑ பெண் ❑

Sex : Male ❑ Female ❑

முகவரி : .....

Address : .....

தொலைபேசி : .....

Telephone Number : .....

மின்னஞ்சல் முகவரி : .....

E.mail Address : .....

சபையின் பெயர் (Church செல்பவராயின்) : .....

Church Name : .....

பங்காளராக இணைவதற்கு (Join for membership) ஏதாவது "√" ஒன்றிற்கு இடவும்.

அக்கினி சிறுவர் குழு	❑	Fire Children Team	❑
அக்கினி வாலிபர் குழு	❑	Fire Youth Team	❑
அக்கினி ஆண்கள் குழு	❑	Fire Gents Team	❑
அக்கினி பெண்கள் குழு	❑	Fire Ladies Team	❑

நான் எனது முழு விருப்பத்துடன் அக்கினி பங்காளராக இணைந்து கொள்கிறேன்.

....

திகதி ஒப்பம்

குடும்பப் பங்காளர்

பெயர் Name	பிறந்த திகதி Date of Birth	பால் Sex (Male or Female)

முகவரி : .....

Address : .....

தொலைபேசி இல. : .....

Telephone Num. : .....

மின்னஞ்சல் முகவரி : .....

E.Mail Address : .....

சபையின் பெயர் (செல்பவராயின்) : .....

Church Name : .....

நாம் எமது முழு விருப்பத்துடன் அக்கினி பங்காளராக இணைந்துகொள்கிறோம்.

....

திகதி கையொப்பம்

சந்தா விபரம்

இச்சஞ்சிகையை தொடர்ந்து பெற விரும்புபவர்கள் உங்களது பெயரையும் விலாசத்தையும் தொலைபேசி இலக்கத்தையும் மிகத்தெளிவாக எழுதி சந்தாப் பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால் சந்தாதாரர்களாக சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

தனிப் பிரதி ரூபா 25.00
ஒருவருடச் சந்தா ரூபா300.00 (தபால் செலவு உட்பட)

வெளிநாட்டுச் சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

இந்தியா	Indian.Rs.350 per year
கனடா, அமெரிக்கா	15$ per year
இங்கிலாந்து	10£ per year
மற்றைய எல்லா நாடுகளும்	SL.Rs. 1000 per year

ஆசிரியர் 'அக்கினி'
இல.173/A, 1ம் ஒழுங்கை,
மகாறம்பைக்குளம்,
வவுனியா.

The Editor "Fire",
No.173/A, 1st Lane,
Maharambaikkulam,
Vavuniya, Sri Lanka.

E-mail : Fire youth1@gmail.com
T.P. 0776185031